உ

கடவுள் துணை.

மலையனூர

பாவாடைராயன் விருத்தம்.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ

அவர்களாற்றமது

திருமகள் விலாச அச்சுக்கூடத்திற்.

பதிப்பிக்கப்பட்டது.

1923.

29

உ

கடவுள் துணை.

மலையனூர்

பாவாடைராயன் விருத்தம்.

சீதளச்செங்கமல வதனச்சிங்காரமும செமப வளகவியூறலும், திவ்யமணிமார்பினில் பதக்கமும் சந்தனப்பொட்டிட்ட நெத்தியழகும், காதிலணிகு ண்டலமும்வச்சிரக்கடுக்கனும் கையில்கணையாழிய ழகும், கனமானசெகதாடு மீசைகன்னிப்பரிசை கண்பார்வை தன்னிலழகும், தாதவழ்தனில்வர்ன மகடம்புஜல்லடமும் சதாகாலம்சாரினழகும், தலை யில்குண்டலபாகை சமுதாடுகத்தியும் காதாயுதம் கையினழகும், ஆதிசதுர்வேதமகிழ் மலையனூர்தன் னிலே அமர்ந்திடுமகாதேவனே, அன்பாகவெனைவ ந்து ரட்சித்து ஆளுவாய் என்அழகு பாவாடைது ரையே.

செஞ்சரணபாதனே கலையானபோதனே தெளிவானசதுர்வேதனே, செப்பனே செங்கமலகையனே துய்யனேஐயனேஜெகநாதனே, கஞ்சலிகபாலியாள் அங்காளரூபிக்குகாதலன்பாலகுமாரா, கண்டதுண்டப்பட சண்டப்ரசண்டவேகனகோப வல்லீரனே, நெஞ்சினில்நினைந்துனை பணிந்தவர்களப்பனே நீடுலகில்முதல்சமையனே, ரணவீரசூரனேஓங்காரரீங்கார ஆங்காரஊங்காரனே, அஞ்சுடரெரிக்கின்ற அரிகோஷ்டபொன்னகரிலமர்ந்திடு மகாதேவனே, அன்பாகயெனைவந்து ரட்சித்துஆளுவாய் என் அழகு பாவாடைதுரையே. 2

பெண்களைக் கன்னமிடுஞ்சோரனே உலகெலாம் போகனேவெகுதீரனே, பூதலம்தன்னிலேஅன்பர் தன்பங்கிலேபொய்யிலாமெய்யானதுரையே, மண்ணுலகில்கண்கண்ட தெய்வம்நீயல்லாமல் மற்றுமொருதெய்வமுண்டோ, மதுமாமிசங்களும் அபினிகஞ்சாயிலை மாஜினம் ரொட்டியுடனே பன்றியாடுகள் கோழிமுப்பூசைவாங்கி மிகபட்சிக்கும் அதிகாரனேபைங்கிளி அன்னுச்சிசாராயம் பூவிமகள் பாங்கானமணவாளனே, அண்ணல்வாழ்பதியான மலைய

னூர்தன்னிலே அமர்ந்திடுமகாதேவனே, அன்பாக வெனைவந்து ரட்சித்துஆளுவாய் என் அழகு பாவாடைதுரையே. 3

பிண்டிபாலாயுதம் வாள்தண்டுசக்கரம் பெரிய திருசூலாயுதம், பீரங்கிவைவெடிகுண்டு பிஸ்த்தோலுடன் பெரும்பூதபடைகளுடனே, தெண்டாயுதம் சூரி வில்லம்புமுள்ளம்பு ஜெயவிருதுபடபாணமும், சிங்காரமாகவே வாங்குசவாளாகக்கழிசுளிகிச் சில்லாக்கோலுடன், கண்டகோடாலிவாள் கட்டாரிபட்டாவும் கன்னிகயர்வலைகளுடனே, கனமெரிதிசேனையும் வனவேட்டையாடியேகளித்து மிகபரியவருவாய், அண்டர்கள்பணிந்துபுகழ் அழகானமலையனூர் அமர்ந்திடுமகாதேவனே,அன்பாகயெனைவந்து ரட்சித்து ஆளுவாய்என்அழகுபாவாடைதுரையே.

பேரானநெடியமகமேருகிரியுனதுபுஜபலமதுக்கிணையாகுமோ, பெரிதானஅஷ்டமலை யுனதுடைய சுண்டுவிரல் அணையாழிசமனாகுமோ,கூரானகொடூர வடவாக்கினியுன்னுடைய கோபாக்கினிக்கெதிராகுமோ, கோடையினில்நின்றுண்ட மேககர்ஜ்ஜனை யுன்து குரல்தொனிக்கெதிராகுமோ, மாராதலிசை கொண்டு பாய்ந்தால் தனம்வானு வுலகமதுபோது

மோ மணிக்குசுக்குமாந்தடி பிடித்துவிளையாடி வர
மண்டல மிடம்போதுமோ ஆறுகொண்டலம்மே
கறைதிகழ்மலையனூர் தன்னிலே அமர்ந்திடுமகாதே
வனே அன்பாகயெனைவந்துரட்சித்துஆளுவாய்என்
அழகுபாவாடைதுரையே. 5

கடல்கொண்டசாராயம் உண்டாலு முன்னு
டைய கனகோபம்சனியாகுமோ காவேரி கொள்ளி
டம் பெருகிவந்ததையுண்ண கனியிதழ் நுனிநனையு
மோ வடமேருமைந்நாகம் மலைபூசைக்கொள்ளினும்
கடவாய்க்குக் கடுகாகுமோ மதிக்கின்றகெஞ்சாவும்
புகையிலைமதுவுண்ண மயக்கமுமதுகாணுமோ நெடி
தானவிணணளவு உதிரபலிகொண்டாலும் உன்னெ
டியவயறதுநிறையுமோ நித்தம்வொருகோடிபெண்
போகமதுசெய்தாலும்உன்நெரிகாமவெறிநீங்குமோ
அடியவர்துதிக்கமிகமலையனூர்தன்னிலே அமர்ந்திடு
மகாதேவனே அன்பாகயெனைவந்து ரட்சித்து ஆளு
வாய் என்அழகு பாவாடைதுரையே 6

சங்கீதமல்லாரிமத்தளம் துத்தியுடன்கைதாள
முரசுபம்பை சம்பிரமாதகவேபேரிடங்காபூரி தாரை

கர்ஞசின்னமும் வெங்கலடவலோசை டம்மாரபேரி
கையும் விருதினிற் கிசைமேளமும்மேலானகொம்பு
யெக்காளமுடன் சரவீணை யாழ்வீணைருத்திரவீணை
இங்கிதமிகுந்ததொனி கோடையிடிபோல நீயெ
ழில் தவளபரியேரியே இருபுரமும் அன்னுட்சி சா
ராயம் பூவிமகள் யெங்கும்விளையாடி வருவாய் அங்
கர்தொழ மதனன்பர்புகழ் மலையனூர்தன்னிலே அ
மர்ந்திடு மகாதேவனே அன்பாகயெனைவந்து ரட்சி
த்து ஆளுவாய் என் அழகு பாவாடைதுரையே. 7

வீரவிஜயன்பரியின் மீதேறிசெங்கையினில்வில்
லம்பு வாள்பிடித்து மீறிவனமேறிகணை தூரியம்பு
டன்கொண்டு மிருகபுலியாள்கள்வீழ கார்கிறமும்
முயல்பன்றி முள்பன்றிப் புள்ளிமான் கலைமான்
சல்லரிகள்வீழ கரியானைமதகுடல்பிளந்து திரமது
கரியகாடி நரிசிங்கம்வீழ சீருளவுசக்கரப்புள் சுரு
ண்டுவிழ செங்கருந்தூளெழும்ப சிங்காரமாகவே
வாங்குசவாளாகச் சுளிகிச்சிலலாக்கோலுடன் ஆர
கொண்டலமென்ற மலையனூர்தன்னிலே யமர்ந்திடு
மகாதேவனே அன்பாகயெனைவந்து ரட்சித்துஆளு
வாய் என் அழகு பாவாடைதுரையே. 8

பூதம்பிசாசுரணசாமுண்டி மாதங்கி பிடாரிமக மாயிவீரி பொல்லாதஜாகினி யிடாகினிமசாகினிகூ ளியிருளன்மோகினி மீதானஉதிரகாட்டேரிகருப்ப னும் உயர்மதுவீரய்யனும் முத்துமுனிலாடமுனி கொறளிகுட்டிச்சாத்தி கூளி சங்கிலிகருப்பன்பேய் பில்லி சூனியம் மந்திரம்தந்திரம் பொல்லாத வடுசல் லியும் அகிலத்துவிவ்விதம் தந்தனக்கிரிகைதனிலட ங்காத ஞானபரனேஆதிசதா வேதமகிழ்மலையனூர் தன்னிலே அமர்ந்திடுமகாதேவனே அன்பாகயென்னை வந்து ரட்சித்து ஆளுவாய் என் அழகு பாவாடை துரையே. 9

சோகைகுன்மம் பெருவியாதி பக்கப்பிளவை துடைவாழை படுகிரந்தி சுகஜன்னி முகஜன்னிசூத கம் மகோதரம் சூலைபரையாப்புகுன்மம் வாய்வு நோய் நீரிழிவு காமாலைவெங்குட்டம் கருங்குட்டம் ஊமைமுதலாய் முறையாகவருஞ்சுரமும் மாரடைப் புப் பித்தம்முறைப்பாடு அண்டவாதம் ஏவல்வைப் புப் புதைப்புசெய்யானும் வண்டுகடியிரும்பல் மிக விப்பிரிதியும் இன்னம் வெகுகோடி வினைவருகினும் அதுவெலாம் யிணங்காமல் விட்டோட்டுவாய் ஆவ

னுடனன்பர்புகழ் மலேயனூர்தன்னிலேஅமர்ந்திடுமெ காதேவனே அன்பாகயெனேவந்து ரட்சித்து ஆளு வாய் என் அழகு பாவாடைதுரையே. 10

பன்னீருபுனுகு கஸ்தூரிஜவ்வாதுபரிமளம்மிக வீசவே பரிதேரியப்பனுடன் ஆலயந்தன்னிலே அமர்ந்துமிக காவுகொண்டாய் உன்னைநான்தேடியே உருகிமனம்வாடியே ஓலமிட்டலறிநின்றால் ஓங்கார ரீங்கார ஆங்கார ஊங்கார சிவயநமபரமகுருவே உன்னையே தெய்வமென யென்னுளும்நம்பியே உகந்து பாலகன் மீதினில் உதிக்கின்றயிடர்தனை நீக்கியே உன்பதம் உகந்துகனம்தருமையனே அன்னதொழிலும் திகழும் மலேயனூர்தன்னிலே அமர்ந்திடுமெகா தேவனே அன்பாகயெனே வந்துரட்சித்துஆளுவாய் என் அழகு பாவாடைதுரையே. 11

மலேயனூர்

பாவாடைராயன் விருத்தம்.

முற்றிற்று.